# ஐங்குறுநூற்றில் வெள்ளாங் குருகுப் பத்து

*முனைவர் அ. பொன்னம்மாள்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5197

## முன்னுரை

ஐங்குறுநூறு எட்டுத்தொகை என வழங்கும் தொகுப்பு நூல்களுள் ஒன்று. இதிலுள்ள பாடல்கள் கடைச்சங்க காலத்தைச் சேர்ந்தவை. அன்பின் ஐந்திணையான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, என்னும் ஐந்து நிலம் சார்ந்த திணைகள் ஒவ்வொன்றிற்கும் நூறு பாடல்கள் வீதம் இந்நூலில் ஐந்நூறு அகத்திணைப் பாடல்கள் உள்ளன. அவை, ஆசிரியப்பாவில் அமைந்த 3 அடி சிற்றெல்லையும் 6 அடி பேரெல்லையும் கொண்டதாக விளங்குகிறது. இந்நூல் குறைந்த அடியெல்லை கொண்ட பாக்களால் அமைந்தமையால் ஐங்குறுநூறு எனப் பெயர் பெற்றது. இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்.அந்தப் பாடல் சிவபெருமானின் விரிவாக்கத் தன்மையை ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணிக் காட்டுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## வெள்ளாங் குருகுப் பத்து

வெள்ளாங்கு குருகின் செய்திகள் வந்துள்ள பத்துச் செய்யுட்களைக் கொண்மையால், இப்பகுதி இப்பெய்ரினைப் பெற்றுள்ளது.

“துறைபோது அறுவைத் தூமடியன்ன நிறங்கிளிர் தூவிச் சிறுவெள்ளங் குருகு” என நற்றிணை இக்குருகினை நமக்கு அறிமுகப்படுத்தும். கடற்கரைகளில் மிகுதியாகக் காணப்பெறும் கடற்பறவை வகைகளும் இவையும் ஒன்று.

“வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக் காணிய சென்ற மடநடை நாரை” என்னும் இரண்டு அடிகளும், பத்துச் செய்யுட்களினும் தொடர்ந்து வருகின்றன.

வேள்ளாங் குருகு என்றது பரத்தை ஆகவும் பிள்ளை என்பது அவளோடு தலைமகனுக்கு உளதாகிய ஒழுக்கமாகவும், காணிய சென்ற மடநடை நாரை என்பது வாயிலாகவும், செத்தன என்றது அவ்வொழுக்கம் இடையிலே நின்றதாக எனவும் பொதுவாக கொள்ளலாம்.

தலைமகன் ஒரு பரத்தையோடு மேற்கொண்டிருந்த ஒழுக்கமானது இடையிலேயே நின்று விட்டதாக, மீண்டும் அவள் உறவை நாடிய தலைவன் வாயில்கள், அவளிடம் சென்று பேசி, அவளது நெஞ்சம் நெகிழ்ந்தத் தலைவன்பாற் செல்லுமாறு நயமாக சொல்வதாகவும் உள்ளுறை பொருள் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு பழைய உரையாளர் விளக்கி, அதற்கேற்பவே பொருள் கொள்வர். உரை பெரும் பேராசிரியரான சித்தாந்தச் செம்மல் ஔவை துரை சாமிப் பிள்ளையவர்களோ, "செத்தன" என்பதற்குப் போலும் என்று பொருள் கொள்கிறார்.

வெள்ளாங் குருகின் பிள்ளையைத் தன் பிள்ளை என்று கருதியதாய்க் காணச் சென்ற மடநடை நாரை என்பது அவர்கள் கொண்டது.

தலைவன் ஊர் தலைவன் என்னும் பெரு நிலையினன் ஆதலின் அவன் உறவாலே அடையும் பயன்களை ஆடும் பரத்தையர் அதனை எவ்வாறும் தமக்கு வசமாக முயல்கின்றனர். தலைவன் கலையாக மிகுந்தவன். பாணன் ஒருவனும் தலைவனோடு பழகி வருகிறான் . அவனன் பரத்தையர் குடியில் பிறந்தவனே. அவனும் தலைவனினௌ பத்தமையின் உறவாலே தானும் பரத்தமையால் பயனடையலாம் என நினைத்து தலைவனோடு வருகின்றான்.

### தலைவியின் நிலைப்பாடு

**"வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தனக்**
**காணிய சென்ற மடநடை நாரை**
**மிதப்ப, தக்க கண்போல் நெய்தல்**
**கட்கமழ்ந் தானாத் துறைவற்கு**
**நெக்க நெஞ்சம் நேர்கல் லேனே!"**

பரத்தையிடம் சென்று வாழ்கின்ற தலைவனின் செயலை ஊரெங்கும் பரவி எள்ளி நகையாடினர் ஊர் மக்கள். எனவே தலைவி தலைவனை நான் இனி என் வாழ்வில் ஏற்க்க மாட்டேன் என்று உறுதியாகக் கூறுவதாக இப்பாடல் அமைகிறது.

**வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்**
**காணிய சென்ற மடநடை நாரை**
**பதைப்ப ஒழிந்த செம்மறுத் தூவி**
**தெள்கழிப் பரக்கும் துரைவன்**
**எனக்கோ காதலன் அனைக்கோ வேறே.**
**156**

பதைபதைத்த நாரை தன் சிறகை அடித்துக் கொண்டது. அப்போது உதிர்ந்த அதன் தூவி கழிநீர்ப் பரப்பெல்லாம் மிதக்கிறது. அப்படிப்பட்ட துறையின் தலைவன் அவன். அவன் எனக்கோ காதலன். அன்னைக்கோ வேறொருவனாகத் தென்படுகிறான்.

**வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்**
**காணிய சென்ற மடநடை நாரை**
**கானலம் பெருந்துறைத் துணையொடு கொட்கும்**
**தண்ணந் துறைவன் கண்டிக்கும்**
**அம்மா மேனிஎம் தோழியது துயரே.**
**158**

காணச் சென்ற நாரை துணை சேர்த்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட துறைக்கு அவன் தலைவன். அவனை நினைத்துக்கொண்டு என் தோழி (தலைவி) தன் அழகிய மாமைநிறம் கொண்ட மேனி வாடித் துயர் பட்டுக்கொண்டிருக்கிறாளே. - தோழி இப்படிச் சொல்லிக் கவலைப்படுகிறாள்.

**வெள்ளாங் குருகின் பிள்ளை செத் தெனக்**
**காணிய சென்ற மடநடை நாரை**
**நொந்ததன் தலையும் நோய்மிகும் துறைவ**
**பண்டையின் மிகப்பெரிது இனைஇ**
**முயங்குமதி பெரும மய்ங்கினள் பெரிதே.**
**160**

காணச் சென்ற நாரை உடல் நொந்து போனது மட்டுமன்றி உள்ளமும் பெரிதும்

*வருந்திகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட துறையின் தலைவன் நீ. இவள் இப்போது முன்பை விடப் பெரிதும் மயங்கி நொந்து கொண்டிருக்கிறாள். மயக்கம் தீர இவளைத் தழுவிக்கொள். - தோழி தலைவனிடம் கூறுகிறாள்.*

## முடிவுரை

*வெள்ளாங்குருகின் (கொக்கு) வாழ்வின் சிறுநிகழ்வினில் உவமை செழுத்தி பாடிய புலமை நலத்தில் கவிதையின் நுட்பத் தினை உணரமுடிகிறது. சங்ககால அகச் சூழலையும், மரபினையும், தொல்காப்பியர் வகுத்த "உள்ளுறை" பொருள் விளக்கத் தன்மையில் உரிப்பொருளேற்றி தலைவன், தலைவி, வாழ்வில் பிணக்கமும் நெகிழ்வும் அதன் சூழலான சமூகமும் உணர்த்துதலால் கவிதையின் பண்பையும் கருப்பொருளின் பொருளாழத்தோடு மெருகூட்டுவதைக் காணமுடிகிறது.*

## பார்வை நூல்


1. *இளம்பூரணர் (உ.ஆ.), 1969: தொல்காப்பியம், கழக வெளயீடு, சென்னை.*
2. *நாராயணசாமி பின்னத்தூர் (உ.ஆ.), 2017: நற்றிணை, கழக வெளயீடு, சென்னை.*
3. *சாமிநாதயைர் உ.வே. (உ.ஆ.), 1920: ஐங்குறுநூறு, கழக வெளியீடு, சென்னை*